தலைப்பு 119 - வலு அமைச்சு - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 119 - வலு அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வலு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 யூன் 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து வலு அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 ஒரு வியடத்தினை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க வலு அமைச்சின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது வலு அமைச்சின் பொது திறைசேரியின் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் வலு அமைச்சின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் வலு அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6 நிதி கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 கணக்க்கீட்டு குறைபாடுகள்

(அ) வருமான பெறுவனவுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
உராய்வு நீக்கி எண்ணை கைத் தொழிலுக்காக 2023 ஏப்ரல் 25 ஆந் திகதிய சிபி/23/0632/621/031 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க வருடாந்த நிரந்தர பதிவு செய்தல் கட்டணமாக ரூபா 6,000,000 தொகையும் அதற்கு மேலதிகமாக வருடாந்த விற்பனை அளவினை அடப்படையாகக் கொண்டு அப்பெறுமதியில் 0.9 சதவீத பணத்தில் வருடாந்த நிரந்தர பதிவுசெய்தல் கட்டணத்தை கழித்து மிகுதிப் பணம் மாறுபடும் பதிவுசெய்தல் கட்டணமாக அறவீடு செய்யப்படுதல் வேண்டும். அமைச்சு ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 3.5 ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெற்ற நிறுவனத்தினால் இறக்குமதிகள் மற்றும் விற்பனைகளுக்குரிய மாதாந்த	2022 ஆம் ஆண்டு வரையும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினாலேயே உரிய மாறுபடும் பதிவுசெய்தல் கட்டணம் அறவீடு செய்யப்பட்டு வந்தது. எனினும் 2023-04-23 ஆந் திகதி-சிபி/23/0632/621/031 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க உரிய கட்டணத்தை நாடு முழுவதும் இந்த அமைச்சின் மூலம் அறவீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க 2024 ஆம் ஆண்டு வரை இலங்கை பொதுபயன்பாடுகள் ஆணைக்குழுவினால் உராய்வு நீக்கி எண்ணை கைத்தொழிலுக்குரிய சந்தைப்படுத்தும் . தகவல்களை	அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க அரசாங்கத்தின் வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தகவல்களை அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க மாதாந்த மற்றும் அரையாண்டு ரீதியான தகவல்களை அரையாண்டு முடிவடைந்து 14 நாட்களுக்குள் மற்றும் வருடாந்தம் கணக்காய்வு செய்த தகவல்களை 06 மாதங்கள் மிகைப்பதற்கு முன்பும் அமைச்சிற்கு மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். 2024 ஆம் ஆண்டின் போது வருடாந்த அனுமதிப் பத்திரங்களைப் பெறறுக்கொண்ட 13 நிறுவனங்கள் மாத்திரம் சுயமதிப்பீட்டின் அடிப்படையில் மாறுபடும் பதிவுசெய்தல் கட்டணங்களை செலுத்தியிருந்தது. அமைச்சினால் உடன்படிக்கையின் பிரகாரம் உரிய தகவல்களை அனுமதிப்பத்திரம் பெற்றவர்களிடம் இருந்து பெற்று பரீட்சித்து 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான மாறுபடும் பதிவுசெய்தல் கட்டணங்களை சரியாக கணிப்பீடு செய்து அறவீடு செய்வதற்கு அல்லது நிலுவையான மாறுபடும் பதிவுசெய்தல் வருமானத்தை நிலுவை வருமானக் கூற்றில் காட்டுவதற்கு நவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக நிலுவை வருமானத்தை சரியாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் குழுவினால் 2023 ஆம் ஆண்டு தொடர்பாக பிரசித்தப்படுத்திய உராய்வு நீக்கி எண்ணையின் சந்தை தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக கணக்காய்வினால் கணிப்பீடு செய்யப்பட்ட நிலுவையான உராய்வு நீக்கி எண்ணை மாறுபடும் பதிவுசெய்தல் கட்டணம் ரூபா 231 மில்லியனாகும்.

நாளதுவரையாக்குதல் நிறுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க இந்த அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தகவல்களுக்கு இணங்க கட்டணங்களை அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டதுடன் தற்பொழுது இந்த அமைச்சு மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் உரிய நடவடிக்கை 2023 மற்றும 2024 ஆம் ஆண்டுகளையும் உள்ளடக்கி எதிர்வரும் காலங்களில் சரியாக பேணுவதற்கான இணக்கப்பாட்டிற்கு வரப்பட்டுள்ளது. அதற்கிணங்க விரைவில் உரிய புகைப்படங்களை ஒழுங்குபடுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்த அமைச்சினால் பணத்தை வழங்குவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகினறது.

(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

உரிய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யப்படும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
அமைச்சிற்கு 60 சதவீதம் உரிமையுடனான வரையறுத்த பொலிப்டோ கம்பனியை மீளமைப்புச் செய்வதற்காக 2018 செப்தெம்பர் 26 ஆந் திகதி செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு நடவடிக்கை உடன்படிக்கையானது கையொப்பமிடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கைக்கு இணங்க ஒப்பந்தக்காரரினால் அமைச்சிற்கு 10 ஆண்டுகளுக்குள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய மதிப்பீடான ரூபா 82,019,500 பெறுமதி இன்றுவரை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அமைச்சிற்கு கிடைக்க வேண்டிய மதிப்பீட்டினை கணிப்பீடு செய்யும் போது ரூபா 1.25 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	பொலிட்டோ லங்கா தனியார் கம்பனியின் Toyota Crew Cab 51-7303ஆம் இலக்க வாகனத்தின் மதிப்பீடுக் அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் நிறைவேற்றமுடியாது என இந்த அமைச்சிற்கு தெரியப்படுத்தியிருந்ததுடன் அதுவரை ஏனைய மதிப்பீடுப் பெறுமதியான ரூபா 82,019,500.00 KL/LM மதிப்பீட:டு அறிக்கையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு உரிய செயற்பாடுகள் மற்றும் பராமரிபபு உன்படிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. பின்னர் லங்கா ஒடோமோபைல் கம்பனியால் அந்த வாகனத்திற்குரிய பெறுமதி மதிப்பீடு செயயப்பட்டது. அந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1.25 மில்லியனாகும். அந்த ரூபா 1.25 மில்லியன் தொகை உடன்படிக்கையில் குறிப்பிடப்படாதிருந்தும் அரசாங்கத்தின் ஒரு சொத்தாக அக்கம்பனியிடம் காணப்படுகின்றது என குறிப்பிடுகிறேன். அதற்கிணங்க அந்த முழுமையான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 83.269 மில்லியனாகும். இது தொடர்பாக அடுத்துவரும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	அமைச்சிற்கு கிடைக்க வேண்டிய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

2 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் தொடர்புபட்டதாக தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபாரிசுகள் அமுல்ப்படத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	விமானங்களுக்கான எரிபொருட்களை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தலுக்காக 2024 ஆம் ஆண்டு தொடர்பாக இரண்டு நிறுவனங்களால் 03 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க 2024 ஆம் ஆண்டிற்காக அமெரிக் டொலர் 30,000 ஆக மதிப்பீடு செய்யப்பட வேண்டிய வருமானம் அமெரிக்க டொலர் 20,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	விமானங்களுக்கான எரிபொருளை (JET A-1) இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தலுக்காக 2024 ஆம் ஆண்டிற்காக Cannel மற்றும் Fits Oil ஆகிய இரண்டு நிறுவனங்கள் பதிவு செய்துள்ளதுடன் இவற்றில் Cannel நிறுவனம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் காணியில் கள்ஞ்சிய தாங்கி மற்றும் குழாய் பதிப்பதற்காக இன்னுமொரு அனுமதிப்பத்திரத்தினை பின்னர் பெற்றுக்கொண்டுள்ளது. இந்த நிறுவனத்தின் மூலம் களஞ்சிய தாங்கி மற்றும் குழாய் பதித்தலுக்காக எந்த செயற்பாட்டு நடவடிக்கைகளும் இன்றுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் அனுமதிப்பத்திரத்தினை புதுப்பித்தலும் இடம்பெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது மேற்கூறிய இரண்டு	காணப்படுகின்ற நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும்.

		நிறுவனங்களும் விமான எரிபொருளை கொண்டுவருவதற்கு மாத்திரம் அறவிடப்பட வேண்டிய பணம் (ஒரு நிறுவனத்திடமிருந்து அமெரிக்க டொலர் 10,000 வீதம்) அமெரிக்க டொலர் 20,000 மாத்திரம் உள்ளடக்கப்பட்டது.	
(ஆ)	2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிலுவை வருமானம் தொடர்பான கூற்று (ஏசீஏ 1(i)) இற்கு இணங்க நிலுவை வருமானமாக அடையாளங்காணப்பட்ட இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்திடமிருந்து 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகள் தொடர்பாக அறவிட வேண்டிய தார் வியாபாரத்திற்கான வருடாந்த பதிவுசெய்த கட்டணம் ரூபா 4,400,000 மற்றும் 2024 ஆம் ஆண்டு தொடர்ாக ஒரு தனியார் கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிடிய உராய்வு நீக்கி எண்ணை அனுமதிப்பத்திர கட்டணம் ரூபா 2,989,020 அறவிடப்பட்டிருக்கவில்லை.	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகள் தொடர்பாக இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் மூலம் அறவிட வேண்டிய தார் வியாபாரத்திற்கான நிலுவையான பதிவுசெய்தல் கட்டணத்தை செலுத்துமாறு எங்கள் நிறுவனம் தெரியப்படுத்தி கடிதம் அனுப்பிவைத்துள்து. இதன் போது இல்ஙகை எரிபொருள் கூட்டுத்ததாபனம் தார் வியாபாரத்திற்காக பதிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனமாக இருந்த போதிலும் எரிபொருள் கூட்டுத்தாபன அதகாரச் சட்டத்திற்கு இணங்க தார் வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக அனுமதிப்பத்தி கடடணத்தை செலுத்துதல் கண்டிப்பானது அல்ல. எவ்வாறாயினும் இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்திற்கு தார் வியாபாரத்திற்கான நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணத்தை செலுத்தவதற்காக பல சந்தர்ப்பங்களின் போது கடிதங்கள் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ENOC Marketing LLC கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிய உராய்வு நீக்கி எண்ணை அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 2,989,020	முறைப்படியாக உரிய நிலுவை வருமானத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	தொகையினை அக்கம்பனி செலுத்த தவறுமாயின். அந்த நிறுவனத்தின் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படும் என நிறுவனத்திற்கு தெரியப்படுத்தி 2025-04-28 ஆந் திகதி கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ENOC Marketing LLC நிறுவனம் 2022 ஆம் ஆண்டிலிருந்து உராய்வு நீக்கி எண்ணைக்காக பதிவு செய்துள்ளதுடன் பதிவுசெய்தல் கட்டணம் 2022 ஆம் அண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டு வரை செலுத்தப்பட்டுள்ளதுடன் வியாபார நடவடிக்கைகளில் இன்றுவரை ஈடுபட்டிருக்கவில்லை.	

3.2 செலவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	05 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படாமையின் காரணமாக 05 மூலதன செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 3,406 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.	சிறிய தீவுகளில் கலப்பு புதுப்பிக்கத்தக்க வலு முறைமையை நிர்மாணித்தல் - செயற்திட்டமானது வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதனால் தேறிய நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தாது சேமிக்கப்பட்டுள்ளது. இச்செயற்திட்டம் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு மற்றும் இந்த இந்திய மானிய செயற்திட்டத்திற்காக நிதியை விடுவிப்பதற்கு இந்திய துாதுவராலயம் ஒருங்கிணைந்து ஒரு செயற்திட்ட கண்காணிப்பு குழுவினை (JPMC) தோற்றுவித்துள்ளது.	ஒதுககீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் செலவு செய்து செயற்திட்டத்தினை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அமுல்ப்படுத்துதல் வேண்டும்.

		வலு கருவிகளை பெயரிடும் நிகழ்சித்திட்டத்திற்காக வாயு சீராக்கப்பட்ட ஆய்வுகூடத்தினை நிர்மாணித்தல் - இச்செயற்திட்டம் வரி விடுதலை பெற்றதனால் நிதி எற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது. வலு பிரிவின் பிரதான திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கான இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - நிதி மானியம் வழங்கிய JICA நிறுவத்தினால் நிகழ்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்படுவதுடன் கணக்கீடு செய்வதற்காக அமைச்சிற்கு செலவு அறிக்கை வழங்கப்படவில்லை. கொரிய அரசாங்கத்தின் மானியத்தின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற பெற்றரி வலு கள்ஞசிய முறைமை - இரண்டு செயற்திட்டங்களை திட்டமிடுவதற்காக இணக்கப்பாட்டினை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன 2025 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டது.	
(ஆ)	119-2-3-36-13-2202 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் அபிவிருத்தி உதவிகளுக்காக வருடந்த பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருக்காததுடன் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 300,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாட்டு பணத்தில் ரூபா 59,697,576 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 240,302,424 அதாவது 80	இந்த ஆலோசனைக் கட்டணத்தை 03 பகுதிகளாக செலத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் முதலாவது 20% செலுத்தப்பட்டுள்ளது. மிகுதி இரண்டு தவணைப் பணங்கள் 60% மற்றும் 20% ஆக செலுத்த வேண்டியுள்ளதுடன் இக்கொடுப்பனவிற்காக சிபாரிசு செய்யப்பட்டு இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துகின்ற	செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றத்தினை இணங்கி கொண்ட பூர்த்தியாக்கல் மட்டத்தின் பிரகாரம் காலரீதியாக மதிப்பீடு செய்து பூர்த்தியாக்கலுக்கு இணங்க காலரீதியாக கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.	நிறுவனமான இலங்கை சூரிய வலு அதிகாரசபையின் மூலம் உரிய தகவல்களை வெளிவிவகார அமைச்சினூடாக இந்திய அரசாங்கத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்திய அரசாங்கத்தின் மூலம் செயற்திட்டம் தொடர்பாக முழுமையான செயற்திட்ட தகவல் அறிக்கைக்கான (Detail Project Report) அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாமையின் காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) மன்னார் பள்ளத்தாக்கில் பெற்றோலிய அகழ்வு நடவடிக்கைகள்		
மன்னார் குடாவில் எம்-2 (M-2) அகழ்வு செய்யும் நிலப்பகுதியில் (SL 2007-01-001) பெற்றோலிய அகழ்வு நடவடிக்கைகளுக்காக ஒரு தனியார் கம்பனி 2007 ஆம் ஆண்டின் போது தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் போது அக்கம்பனியால் இரண்டு இயற்கையான எரிவாயு குதங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.	2007 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை பணிப்பாளர் நாயகம் பதவி வகித்த மற்றும் 2011 ஆம் ஆண்டின் போது கணிய வளத்தை ஆய்வு செய்தல் மற்றும் அகழ்தல் செயற்பாட்டினை மேற்கொண்ட கெயான் லங்கா கம்பனியை நாட்டிற்கு அழைத்து வருவதற்கு முன்னின்று செயற்பட்ட பேராசிரியர் நீல் டி சில்வா அவர்கள் மீண்டும் 2024-12-18	அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க மேலதிக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன் இது தொடர்பாக மீண்டும் மீளாய்வினை மேற்கொள்ளுதல் முக்கியமானதாகும்.

2016 செப்தெம்பர் 06 ஆந் திகதிய 16/1745/746/021 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்திற்கு இணங்க மன்னார் குடாவில் எம் - 2 (M-2) அகழ்வு நிலப்பகுதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட இயற்கை எரிவாயு குதங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பொருத்தமான முதலீட்டாளரினை சர்வதேச போட்டி பிரேரணைகளை கோரும் நடைமுறைகளின் மூலம் தெரிவு செய்வதற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் ஆலோசகரின் உதவியை பெற்றுக்கொள்வதற்காக ஒரு வெளிநாட்டுக் கம்பனி 2016 திசெம்பர் 14 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தது. ஆலோசனை உதவியை பெற்றுக்கொள்ளும் உடன்படிக்கை 2017 திசெம்பர் 13 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் அச்செயற்பாட்டிற்காக அமைச்சினால் அமெரிக்க டொலர் 300,000 அதாவது அப்போது காணப்பட்ட நாணயமாற்று வீதத்திற்கு இணங்க ரூபா 46,610,853 செலவு செய்யப்பட்டிருந்தது. இலங்கையில் பெற்றோலிய வளங்களை அகழ்தல், அபிவிருத்தி செய்தல், சேகரித்தல், முகாமைத்துவம் செய்தல் ஆகிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்ததுடன் 2021 இன் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் 2021 ஒக்தோபர் 08 ஆந் திகதி இலங்கை பெற்றோலிய ஆந் திகதியிலிருந்து இலங்கை கணிய வளங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்பொழுது அவரின் வழிகாட்டலின் கீழ் புதிய தந்திரோபாய வேலைத்திட்டமாக மன்னார் குடாவில் 04 ஆய்வு நிலப்பகுதிகளுக்கான அனுமதிப்பத்திர சுழற்சிகளைப் பேணி பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயுவினை அகழ்தல் மற்றும் உற்பத்தி செய்தல் செயற்பாடுகளுக்காக முதலீட்டுப் பிரேரணைகளை கோருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இச்செயற்பாடுகளுக்காக 2025-05-07 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

	அபிவிருத்தி அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் ஒன்றித்த ஆய்வு உடன்படிக்கை மற்றும் பெற்றோலிய வளங்கள் சேவைகளை வழங்குனர்களின் அதிகாரத்திற்குரிய பிரமாணம் மற்றும் இலங்கை பெற்றோலிய வளங்களை அகழ்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் நிலப்பகுதியின் படம் வெளியிடப்பட்டிருந்தும் உரிய ஆய்வுகளுக்காக பொருத்தமான ஒரு முதலீட்டாளரினை கண்டு பிடிப்பதற்கு கணக்காய்வுத் திகதி வரை முடியாதிருந்தது.	

4.2 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் கீழ் ரூபா 47,658 மில்லியன் பெறுமதியான 15 அபிவிருத்தி செய்ற்திட்டங்களை மீளாய்வாண்டில் அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் 07 செயற்திட்டங்களின் நடைமுறை ஆண்டிற்கான நிதிசார் செயல்முன்னேற்றம் மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் 51 சதவீதத்தினை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது என செயற்திட்ட செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.	07 செயற்திட்டங்கள் தொடர்பாக தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.	நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டங்களை முடிவு செய்து எதிர்பார்த்த இலக்குகள் அடைந்து கொள்ளப்படுதல் வேண்டும்.

4.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
அமைச்சினால் 2024 திசெம்பரி 31 ஆந் திகதியில் உள்ளவாறு விசாரணைகள் முடிவடைந்துள்ள 04 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக ந.பி 104(4) இன் பிரகாரம் ரூபா 2,676,191 நட்டம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	PH-2913 ஆம் இலக்க வாகனத்திற்குரிய விபத்து சம்பந்தமான நட்டத்தை காப்புறுதி கம்பனியால் ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. PC -4318 ஆம் இலக்க வாகனத்தின் விபத்து சம்பந்தமாக காப்புறுதி பெற்றுக்கொள்ளப்பட்டு இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய விபரம் காப்புறுதி நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. HE-2381 ஆம் இலக்க வாகனத்தின் விபத்து சம்பந்தமான நட்டத்தை அறவீடு செய்வதற்காக விபத்துக்குப் பொறுப்பு கூறவேண்டியவாரான 59-8950 ஆம் இலக்க வாகனத்தின் சாரதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இலங்கை போக்குவரத்து சபையின் சட்ட உத்தியோகத்தரினால் அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டது. CAF 5016 ஆம் இலக்க வாகனத்தின் விபத்து சம்பந்தமான மிகுதிப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	நட்டத்தை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) **வரையறுத்த போலிப்டோ லங்கா தனியார் கம்பனி**		
அப்புறப்படுத்தப்பட்ட பிளாஸ்ரிக்/ பொலிதீன் மூலம் எரிபொருளை தயாரிப்பதற்காக 2009 ஆம் ஆண்டில் அமைச்சிற்கு 60 சதவீத பங்கு உரிமையுடன் வரையறுத்த பொலிப்டோ இலங்கை தனியார் கம்பனி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் கம்பனியை மீள் கட்டமைப்புச் செய்து அமைச்சிற்கும் தயாரிப்பாளருக்குமிடையயே 2018 செப்தெம்பர் 26 ஆந் திகதி செயற்பாடு மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் 09 ஆம் பிரிவிற்கு இணங்க மீளமைப்புச் செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது கம்பனியின் நிலையான சொத்துக்களின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 82,019,500 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் 12 ஆம் பிரிவின பிரகாரம் மதிப்பீட்டுத் தொகையான ரூபா 82,019,500 முழுத் தொகை மற்றும் அது தொடர்பான வட்டியுடன் அமைச்சிற்கு செலுத்தி முடிவடையும் வரை கம்பனியின் பங்குகளின் உரிமையில் 01 சதவீதம் அமைச்சிற்குரியதாக இருக்க வேண்டும் என காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக 2018 ஒக்தோபர 03 ஆந் திகதி அமைச்சிற்குச்	அப்புறப்படுத்தப்பட்ட பிளாஸ்ரிக் மூலம் எரிபொருளைத் தயாரிப்பதற்காக வரையறுத்த பொலிப்டோ லங்கா தனியார் கம்பனி 2009 ஆம் ஆண்டின் போது சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பான விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் ஆரம்பித்து 2011 ஆம் ஆண்டின் போது பெற்றோறலிய வளங்கள் அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. 2018 ஆம் ஆண்டு வரை அக்கம்பனியின் உற்பத்தி மற்றும் நிருவாக நடவடிக்கைகளுக்காக பணம் நிதி அமைச்சினால் வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க 2018 ஆம் ஆண்டின் போது இக்கம்பனியை மீளமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் போது அதில் தயாரிப்பாளருக்குச் சொந்தமாக இருந்த	உடன்படிக்கையின் பிரகாரம் மீண்டும் தீர்த்துவைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

சொந்தமான கம்பனியின் அனைத்து பங்குகளும் தயாரிப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. கம்பனி ஆரம்பத்திலிருந்து மீளமைப்புச் செய்யப்பட்ட சந்தர்ப்பம் வரையான காலப்பகுதியின் அரசாங்கத்தினால் தொடக்க மூலதனத்தையும் உள்ளடக்கி ரூபா 300 மில்லியனுக்கு மேற்பட்ட செலவு இக்கம்பனிக்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. தேசிய ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பல குறிக்கோள்களை நிறைவேற்றுவதனை முன்னிலைப்படுத்தி ஒரு முனனோடிச் செயற்திட்டமாக ஸ்தாபிக்கப்பட்ட இக்கம்பனியின் செயற்பாடுகளை வணிகம் சார்ந்த ஒரு செயற்திட்டமாக அமுல்ப்படுத்தும் போது முறையான கிரய பிரதிபலன் பகுப்பாய்வினை மேற்கொள்ளாமை, உற்பத்திப் பொருள் சந்தை வாய்ப்பினை அடையாளம் காணாமை, என்பவைகளை உள்ளடக்கிய செயற்பாடுகளை திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தின் பலவீனத்தின் காரணமாக எதிர்பார்த்த குறிக்கோள்களைை அடைந்துகொள்வதற்கு அல்லது அரசாங்கம் ஈடுபடுத்திய பணத்திற்கு ஏதாவது பிரதிபலனை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

கம்பனியின் 30 சதவீத பங்ககளுக்கு மேலதிகமாக அரசாங்கத்திற்கச் சொந்தமான 60 சதவீத பங்ககளும் மொறட்டுவை பல்கலைக்கழத்திற்குச் சொந்தமான 10 சதவீத பங்ககளுமாக முழுமையான பங்குகளும் அக்கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. உரிய செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு உடன்படிக்கைக்கு இணங்க மீளமைப்பு செய்யப்பட்டதன் பின்னர் கம்பனிகுச் சொந்தமான உரிய இயந்திரத்தின் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு அக்கம்பனிக்குரியதாகும்.

எனினும் 04 ஆண்டுகள் அளவிலான காலத்தில் அக்கம்பனியின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் தாமதமடைந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது சுறறாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பொலிட்டோ கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த அமைச்சுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது பொலிப்டொ லங்கா தனியார் கம்பனியின் முகாமைத்துவம் குறிப்பிட்டதானது

		பிளாஸ்ரிக் மூலப் பொருளை மாத்திரம் பயன்படுத்தி எரிபொருளை தயாரித்தல் நட்டமாகும் என்பதனால் அப்புறப்படுத்தப்பட்ட கழிவு எண்ணையையும் பயன்படுத்தி இந்த எரிபொருளை தயாரிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். எவ்வாறாயினும் இக்கபனியின் நிலையான சொத்துக்களின் மதிப்பீட்டுப் பணமான ரூபா 83,269,500 தொகை அக்கம்பனியின் சொத்துக்களாக காணப்படுவதுடன் அத்தொகையை மீண்டும் தீர்த்துவைப்பதற்காக 2018 ஆம் ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் சலுகைக் காலம் இக்கம்பனிக்கு வழங்கப்பட்டது. காணப்படுகின்ற சலுகைக் காலத்திற்குள் இச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை இன்னும் முறைமைப்படுத்தி வெற்றிகரமானதாக மாற்றுவதற்காக அக்கம்பனியால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	
(ஆ)	2024 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் அமெரிக்க டொலர் 11,900,000 ஆன கொரிய அரசாங்கத்தின் உதவியின் கீழ் நிர்மாணிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட	2024 ஆம் ஆண்டிற்கான திட்டம் அங்கீகரிக்கப்படாததனால் செயற்திட்டம் ஆரமபிக்கப்படவில்லை.	அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களினால் அமுல்ப்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட செயற்திட்டம் சம்பந்தமாக

	ஹம்பாந்தோட்டை பெற்றரி வலு களஞ்சிய முறைமை செயற்திட்டத்திற்காக 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 3,239,000,000 திறைசேரி நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் உரிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.		முறையான கண்காணிப்பினை மேற்கொண்டு அச்செயற்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	**இலங்கையின் தேசிய வலு கொள்கையை அமுல்ப்படுத்துதல்**		
(i)	ஒரு தேசிய செயற்பாட்டுக் குழுவின் மூலம் வலு கொள்கையை அமுல்ப்படுத்துதலினை கண்காணிப்புச் செய்யப்பட வேண்டியதுடன் உரிய குழு காலாண்டு இடை வெளிக்குள் கூடி அமுல்ப்படுத்தும் செயல்முன்னேற்றத்தினை அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டில் தேசிய செயற்பாட்டுக் குழு கூட்டங்கள் நடாத்தப்படவில்லை.	தேசிய செயற்பாட்டு குழு 2024 ஆம் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்படவில்லை. இதற்கு பிரதான காரணமாவது அமைச்சு செயலாளர்கள் சிலர் மற்றும் நிறுவன தலைவர்கள் சிலர் மாத்திரம் இருப்பதனால் அச்செயற்பாட்டினை மேற்கொள்ளுதல் நடைமுறைச் சாத்தியமற்றதாக இருப்பதனாலாகும்.	வலு கொள்கையினை அமுல்ப்படுத்தும் செயல்முன்னேற்றத்தினை காலரீதியாக கண்காணிப்புச் செய்து அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.
(ii)	வலு கொள்கை வெளிப்படுத்தலின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் செயலாற்றல் கால அட்டவணையானது ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்தினால் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும் 2019 ஆம் ஆண்டிலிருந்தது 2024 ஆம் ஆண்டு வரை 05 ஆண்டுகள் கடந்திருந்தும் உரிய	தேசிய வலுக் கொள்கைக்கு இணங்க கால அட்டவணையானது ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டின் போது அவ்வாறு இடம்பெறவில்லை. எனினும் 2024 ஆம் ஆண்டின் போது இக்கொள்கையை மீளாய்வு செய்து சிபாரிசினை வழங்குவதற்காக ஒரு	வலு செயலாற்றல் கால அட்டவணையானது காலரீதியாக அமைச்சின் கண்காணிப்பின் கீழ் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

	செயலாற்றல் கால அட்டவணையினை தேவைக்கு ஏற்றவாறு திருத்தம் செய்வதற்கு மேற்கூறிய நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அமைச்சினால் அந்த நடவடிக்கை கண்காணிப்புச் செய்யப்படவில்லை.	மீளாய்வுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.	
(iii)	செயலாற்றல் கால அட்டவணையில் வலு துறையின் நல்லாட்சியினை வலுப்படுத்துவதன் கீழ் 4.8g பந்தியானது போட்டி அடிப்படையில் முதலீட்டாளருக்கும் அபிவிருத்தி பங்காளருக்கும் இலகுவாக பங்குபற்றுவதற்காக வலு துறையிலுள்ள அனைத்து செயற்திட்டங்களையும் முதலீட்டு வாய்ப்புக்களையும் அடையாளங்கண்டு ஏதாவது பொருத்தமான செயற்திட்ட கருதுகோள் மாதிரியினை ஆவணப்படுத்தி ஒவ்வொரு நிறுவனத்தினாலும் 2020 ஆம் ஆண்டிலிருந்து வெளியிடுதல் வேண்டும். சூரிய வலு அதிகாரசபை மாத்திரம் நாட்டில் காணப்பட்ட அனைத்து புத்துருவாக்ககூடிய வலு மூலங்கள் காணப்படுகின்ற இடங்களை வர்த்தமானியின் மூலம் பிரசித்தப்படுத்தியிருந்தது. எனினும் மேற்கூறிய பந்தியின் பிரகாரம் அமைச்சினால் அந்த நடவடிக்கை	மின்வலு சபையினால் அடையளாங்காணப்பட்ட செயற்திட்ட முதலீடுகளுக்காக தனியார் துறையிடமிருந்து பிரேரணைகளைக் கோரும் போது அதற்காக Reguest for Proposal (RFP) மாதிரி தயாரிக்கப்பட்டுள்ளது.	வலுத்துறையில் காணப்படுகின்ற செயற்திட்டங்கள் மற்றும் முதலீட்டு வாப்புக்களை அடையாளங்கண்டு பிரசித்தப்படுத்துதல் வேண்டும்.

	கண்காணிப்பு செய்யப்பட்டது என்பதற்கு கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.		
(iv)	செயலாற்றல் கால அட்டவணையின் 4.9e பந்தியின் பிரகாரம் பொதுச் சேவைகளை பரப்புகின்ற மற்றும் பகிர்ந்தளிக்கின்ற வழிகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்காக நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்புச் செய்கின்ற அதிகாரசபையை 2020 ஆம் ஆண்டளவில் தோற்றுவிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் 2024 ஆம் ஆண்டின் இறுதிவரை அது அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கு கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	மோதல்களை தீர்த்துவைப்பதற்காக நிறுவனங்களுக்கிடையிலான பயன்பாட்டு கொரிடோர் ஒருங்கிணைப்பு அதிகாரசபை 2020 ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது செயற்படவில்லை.	கொள்கையில் உள்ள இலக்குகளை நிர்ணயிக்கப்பட்டவாறு அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(v)	செயலாற்றல கால அட்டவணையில் வலு வினைத்திறன் மற்றும் பேணிக் காத்தலினை மேம்படுத்துதலின் கீழ் பொது இடங்களை ஒளிமயமாக்குதலை உள்ளடக்கி கிராமிய, நகர மற்றும் பிரதான வீதிகளை ஒளிமயப்படுத்துவதற்காக ஒளிமயப்படுத்துதல் நியமம் 2020 ஆம் ஆண்டில் அமைச்சினால் அறிமுகப்படுத்தி கட்டாய அடிப்படையில் செயற்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் உரிய நியமம் இன்றுவரை வெளியிடப்பட்டுள்ளது	பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் தயாரித்து அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த நியமங்களுக்கு இணங்க முன்னோடி செயற்திட்டம் அமுல்ப்படத்தப்பட்டு வருகின்றது. திவுலபிடிய பிரதேச சபை எல்லைக்குள் ஆராய்ச்சி மட்டத்தில் தெரு விளக்குகளை ஒளிரச் செய்வதற்கான செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் ஏனைய பொது இடங்களுக்கும் இதனை	நியமத்தில் உள்ள இலக்குகளை நிர்ணயிக்கப்பட்டவாறு அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	என்பதற்கு கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	அறிமுகப்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.	
(vi)	வலு கொள்கையை அமுல்ப்படுத்தும் தந்திரோபாயத்தில் மீள்புதுப்பிக்கும் வலுவின் பங்களிப்பினை அதிகரிப்பதற்காக 3.7.5 ஆம் பந்தியின் பிரகாரம் காற்று மற்றும் சூரிய வலு போன்ற மாற்று மீள்புதுப்பிக்க கூடிய வலு மூலகங்களிலிருந்து தோற்றுவிக்கின்ற மின்சாரத்தினை மின்சார முறைமைக்கு உள்ளீர்ப்புச் செய்யும் போது உருவாகின்ற தொழில்நுட்ப பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்காக எடுக்ககூடிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லை .	மீள்புதுப்பிக்ககூடிய வலுவினை தேசிய முறைமைக்குள் சேர்த்துக் கொள்வது தொடர்பான பிரச்சினைகள் மற்றும் தீர்வுகளை அடையாளம் காண்பதற்காக பொதுமக்கள் பயன்பாட்டுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் அது தொடர்பாக ஒரு அறிக்கை வழங்கப்படும்.	கொள்கையில் உள்ளடக்கப்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டு மீள்புதுப்பிக்ககூடிய வலு மூலகங்களிலிருந்து மின்சார முறைமைக்கு இணைப்புச் செய்யும் போது உருவாகின்ற பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.